ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2240/37 - 2021 අගෝස්තු මස 14 වැනි සෙනසුරාදා - 2021.08.14
*2240/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி சனிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 24/51* (iv)

**(*203 ஆம் அத்தியாயமான*) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட் ஒழுங்கு விதிகள்.*

போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு ,
*2021, ஓகத்து 13.*

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கர மிதிவண்டி - துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்) ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஒரு மோட்டார் முச்சக்கர மிதிவண்டிக்குப் பொருத்தப்பட வேண்டிய அல்லது இணைக்கப்பட வேண்டிய துணைக் கருவிகள் -

(அ) அதன் மூல முன்மாதிரியின் எடையை, பரிமாணங்களை அல்லது வரையறைகளை விஞ்சுதலாகாது;

(ஆ) அதன் வடிவத்தை, வடிவமைப்பை அல்லது வெளிப்புறத் தோற்றத்தை மாற்றுதலாகாது;

(இ) அது எந்நோக்கத்துக்காக உற்பத்தி செய்யப்பட்டதோ அந்நோக்கத்தை இழத்தலாகாது;

(ஈ) அதன் நடுநிலையமைதியை இழத்தலாகாது;

(உ) சாரதியின் ஆசனத்தின் அல்லது ஒரு பயணியின் ஆசனத்தின் ஆசனத்துக்கான இடத்தை பரந்ததாக்குதலாகாது;

(ஊ) சாரதியின் தனி இடத்தினதும் ஒரு பயணியின் தனி இடத்தினதும் காற்றுத் தடுப்பின் அல்லது பக்க இடைவெளிகளின் சுற்று பார்வையைத் தடைப்படுத்துதலாகாது;

(எ) பிற்புறச் சுற்றுப் பார்வைக் கண்ணாடிகளின் சுற்றுப் பார்வையைத் தடைப்படுத்துதலாகாது;

(ஏ) பிரதிபலிக்கின்றவொரு வெளிப்பக்கத்தைக் கொண்டிருத்தலாகாது ; அத்துடன்

(ஐ) வீதியை அல்லது அதன் சுற்றுப்புறத்தைப் பயன்படுத்துகின்ற ஆட்களுக்கு முட்டுக்கட்டையொன்றை அல்லது ஆபத்தை விளைவிக்கும் வகையில் கூர்மையான விளிம்புகளையுடைய துணைக்கருவிகளைக் கொண்டிருத்தலாகாது.

3. ஒரு மோட்டார் முச்சக்கர மிதிவண்டியின் மீது வெளிச்சங்களை இணைக்கும்போது -

(அ) மோட்டார் முச்சக்கர மிதிவண்டியின் அடையாளத்துக்கான மாற்றமொன்று இருத்தலாகாதென்பதுடன் அது எந்நோக்கத்துக்காக உற்பத்தி செய்யப்பட்டதோ அந்நோக்கத்தை அது இழத்தலுமாகாது;

(ஆ) தலைமை ஒளிக்கதிர்களையும் கீழ்நோக்கிய ஒளிக்கதிர்களையும் ஒரு சுட்டிக்காட்டியையும் கொண்டிருக்க வேண்டிய வெளிச்சமிக்க விளக்குகள், வெள்ளி நிற அல்லது மஞ்சள் நிற வெளிச்சத்தை உடையனவாதல் வேண்டும். விளக்குகள் வாகனத்தின் முற்புறத்தில் கெட்டியாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வாகனம் நகர்ந்து கொண்டிருக்கும் போது, வெளியிலுள்ள வெளிச்சம் மங்கலாகவிருக்கும்போது அல்லது ஓர் ஊர்வலத்துக்காகப் பயன்படுத்தப்படும் போது வெளிச்சமிடப்பட்டனவாக வைத்திருக்கப்படுதலும் வேண்டும். சொல்லப்பட்ட விளக்குகள் வாகனத்தின் முற்புறத்திலிருந்து 300 மீற்றர்களுக்கு மேற்பட்ட ஒரு தூரத்துக்குத் தெளிவாகத் தென்படத்தக்கனவாகவிருத்தல் வேண்டும்.

(இ) பின்புற வெளிச்சங்கள் - ஒரு சிவப்பு நிற வெளிச்சமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிச்சங்களின் தன்மையானது என்ஜின் வெப்பமூட்டப்படும் போது ஒளியூட்டப்படும் என்பதாகும். வெளிச்சங்கள் வாகனத்தின் பிற்புறத்தில் கெட்டியாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வாகனத்தின் பிற்புறத்திலிருந்து 200 மீற்றர்களுக்கு மேற்பட்ட ஒரு தூரத்துக்குத் தெளிவாகத் தென்படத்தக்கனவாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) எவையேனும் மேலதிக வெளிச்சங்களை இணைத்தலானது, ஒரு மோட்டார் முச்சக்கர மிதிவண்டியின் அடையாளம், வடிவம் மற்றும் பரிமாணத்துடன் தலையிடுதலாகாதென்பதுடன் பகல் அல்லது இரவு நேரத்தில் வீதியைப் பயன்படுத்துகின்ற ஆட்களுக்குத் தொந்தரவை விளைவித்தலுமாகாது.

4. மோட்டார் முச்சக்கர மிதிவண்டியின் பக்கக் கண்ணாடிகள் ஒரு மோதல் ஏற்படும் பட்சத்தில் அவை இலகுவாகப் பிற்புறமாக வளைக்கப்பட முடியுமானஅத்தகையவொரு வழியில் இணைக்கப்படுதல் வேண்டும்.

5. சாரதியின் ஆசனத்திற்கு நேர்பின்னராக இணைக்கப்பட்ட ஓர் அடைப்பு, மோதலொன்று ஏற்படும் பட்சத்தில் ஊறு விளைவிக்கக்கூடிய கூர்மையான விளிம்புகளைக் கொண்டிருத்தலாகாது.

6. மோட்டார் முச்சக்கர மிதிவண்டியின் டயர்கள், சக்கரமட் பட்டை மற்றும் சில்லு மறைப்பு, வீதியைப் பயன்படுத்துகின்ற ஆட்களுக்கு ஆபத்தை, முட்டுக்கட்டையை அல்லது தொந்தரவை விளைவிக்கும் வகையில் அல்லது விளைவிக்கும் சாத்தியங்கொண்ட வகையில் முன் நீண்டிருப்பதற்கு இணைக்கப்படுதலாகாது.

7. ஒரு மோட்டார் முச்சக்கர மிதிவண்டியின் வெளிப்புறத் தோற்றத்துக்காகக் குறித்துரைக்கப்பட்ட நிறத்துக்கான மாற்றமொன்றைப் பயனுறுத்துவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். பதிவுச் சான்றிதழில் அம்மாற்றத்தைப் பயனுறுத்துவதற்கென, ஆணையாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக விண்ணப்பமொன்று செய்யப்படுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்கு விதிகளில் -

"மோட்டார் முச்சக்கர மிதிவண்டி" என்பது (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

"துணைக்கருவிகள்" என்பது, விளக்குகள், வெளிச்சங்கள், வெளிச்ச மறைப்புக்கள், சில்லுகள், சில்லு மறைப்புக்கள், ஓரங்கள், டயர்கள், சக்கர மட்பட்டைகள், சேற்று மூடு விளிம்புகள், பக்கக் கண்ணாடிகள், பிற்புறச் சுற்று பார்வைக் கண்ணாடிகள், கதவு மூடிகள், வண்டி முகடு மூடிகள், காற்றுத் திருப்பிகள், அடிதாங்கிகள், கருவிகலத் தொகுதிகள், வேகத்தைக் குறைக்கின்ற இறக்கைகள், ஆசனங்கள், பக்கத் திரைகள், வானிலை மறைப்புக்கள், ஒட்டிகள் என்பவற்றை உள்ளடக்கும்.

08-439

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.